RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 1 | ஜனவரி.5 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## ‘போதையில் இருந்து மாணவர்களை காப்பாற்றும் பொறுப்பு அரசுக்கும் உண்டு

சிவகங்கை, ஜன.5-

ஜன.4: தமிழகத்தில் உள்ள மத்திய அரசு பள்ளிகளுக்கு முன் போதை வஸ்துகள் விற்கும் நிலை உள்ளது. பிள்ளைகளை போதைப் பழக்கத்தில் இருந்து காப்பதற்கு பெற்றோருக்கு கடமை இருப்பது போல் அரசுக்கும் கடமை உள்ளது என பா.ஜ., தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா தெரிவித்தார்.

சிவகங்கையில் அவர் கூறியதாவது: சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் நடந்த வைகுண்ட ஏகாதசி விழாவில் முன்னாள் கவர்னர் தமிழிசையை நீ வா போ என்று பேசியது என்ன நாகரிகம். இரண்டு மாநிலங்களுக்கு ஆளுநராக இருந்தவர் தமிழிசை. அரசியல் பாரம்பரியம் உள்ளவர். நேற்றைய தினம் சுசீந்திரத்தில் பாரத் மாதா கி ஜே என்று கோஷம் போட்டவுடன் ஏன் அமைச்சர் சேகர்பாவிற்கு



கோபம் வருகிறது. சேகர்பாபுவின் நடவடிக்கை ஹிந்து விரோதமாக உள்ளது.

பழநி முருகன் கோவிலில் முருகன் மாநாடு நடத்தியதற்கு கணக்கு கொடுக்கவில்லை. உயர் நீதிமன்றமே 76 கோயில்களுக்கு கணக்கு கொடுக்கவில்லை என்று கூறி கணக்கு உடனே கொடுக்கக் கூறியுள்ளது.

போதையில் குழந்தைகள் ஆட்படாமல் பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதல்வர் கூறியுள்ளார். ஆனால் அப்பாவான நீங்கள் டாஸ்மாக் கடையை திறந்து வைத்துள்ளீர்கள். கவர்னர் சங்கரன்கோவிலில் போதை ஒழிப்பு மாநாட்டில் கேட்ட கேள்விக்கு இன்று வரை முதல்வரிடமிருந்து பதில் வரவில்லை.

தமிழகத்தில் உள்ள மத்திய அரசு பள்ளிகளுக்கு முன் போதை வஸ்துகள் விற்கும் நிலை உள்ளது. பிள்ளைகளை போதைப் பழக்கத்தில் இருந்து காப்பதற்கு பெற்றோருக்கு கடமை இருப்பது போல் அரசுக்கும் கடமை உள்ளது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பற்றி பேச ஒன்றுமே இல்லை. திருத்தணியில் போதையில் பட்டாகத்தி வைத்துக் கொண்டு இளைஞர்கள் ஒடிசா மாநில இளைஞரை தாக்குகின்றனர். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கோயம்புத்தூரில் கொலை செய்யப்படுகிறார். அவசரமாக 24 மணி நேரத்தில் எவ்வாறு பிரேத பரிசோதனை செய்தார்கள். சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இரண்டு புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 2026ல் தி.மு.க., அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என்றார்.

## பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 : முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜன.5-

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கப் பணம் வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட முதல்வர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.



இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000 வழங்கிட முதல்வர் ஆணையிட்டுள்ளார். பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு மொத்தம் ரூ.6936,17,47,959 செலவில் வழங்கப்படும்.

பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, பொங்கல் பரிசை சுமூகமாக பயனாளிகளுக்கு சென்று சேரும் வகையில் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. அதன்படி தமிழகம் முழுவதும் பொங்கல் பரிசுக்கான டோக்கன் வினியோகம் செய்யும் பணி தொடங்கி இருக்கிறது.

தலைநகர் சென்னையில், பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று டோக்கன் வினியோகிக்கும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இந்த டோக்கனில் அவருக்கு பொங்கல் பரிசு அளிக்கப்படும் அல்லது பரிசுத் தொகை பெறும் நேரம், தேதியுடன் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும், ரேஷன் கடையின் பெயர், குடும்ப அட்டைதாரர் பெயர், அட்டை எண், தெரு, டோக்கன் எண் உள்ளிட்ட விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் குறிப்பட்ட விவரங்களை பின்பற்றி, உரிய தேதியில், உரிய நேரத்தில் பயனாளிகள் பொங்கல் பரிசை பெற்றுக் கொள்ளலாம்.

பொங்கல் பண்டிகைக்கு முன்பாகவே அனைத்து பயனாளிகளுக்கும் பரிசுத்தொகுப்பு மற்றும் ரொக்கத்தை அளிக்க நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருகின்றன. அனேகமாக ஜன.8 அல்லது ஜன.9ம் தேதி முதல் இவை வினியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.



## லஞ்ச வழக்கில் ஐ.ஏ.எஸ்., கைது

ஆமதாபாத், ஜன.5-

குஜராத் மாநிலம், சுரேந்திரநகர் கலெக்டராக இருந்தவர் ராஜேந்திர குமார் படேல். இவரது அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றுபவர் சந்திர சிங் மோரி. இவர் வருவாய்த் துறை துணை அதிகாரியாக பணியாற்றியபோது, சவுராஷ்டிரா குடியேற்ற குத்தகைத் தீர்வு சட்டத்தின்படி, பொதுமக்கள் பெயருக்கு நிலத்தை மாற்றும் பணிக்கான விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அப்போது, விண்ணப்பங்களுக்கு விரைவில் அனுமதி வழங்க விண்ணப்பதாரர்களிடம் மோரி லஞ்சம் பெற்றுள்ளார். இது தொடர்பாக பணமோசடி வழக்குப்பதிவு செய்த அமலாக்கத்துறை அதிகாரிகள், மோரி மற்றும் சிலரை கைது செய்தனர்.

லஞ்சம் பெற்ற வழக்கில் தொடர்பிருப்பதாக கூறி, சுரேந்திர நகர் கலெக்டர் ராஜேந்திரகுமார் படேலை, ஒரு வாரத்துக்கு முன் எந்த பதவியும் வழங்காமல் காத்திருப்போர் பட்டியலுக்கு மாநில அரசு மாற்றியது. இந்நிலையில், லஞ்சம்பெற்றதில் தொடர்புடையதாக பணமோசடி வழக்குப்பதிவு செய்த அமலாக்கத்துறை, படேலை கைது செய்தது.

முன்னதாக அமலாக்கத் துறையினர் அளித்த புகாரின்படி, குஜராத் லஞ்ச ஒழிப்பு போலீசாரும் படேல் மற்றும் மூவர் மீது பணமோசடி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## டெல்லியில் புத்தர் நினைவு கண்காட்சி: பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்

புதுடெல்லி, ஜன.5-

டெல்லியில் நேற்று புத்தர் நினைவு கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

‘ஒளி மற்றும் தாமரை: விழிப்புற்றவரின் நினைவுச் சின்னங்கள்' என்ற பெயரில் புத்தருடன் தொடர்புடைய புனித நினைவுச் சின்னங்களின் பிரம்மாண்ட சர்வதேச கண்காட்சி டெல்லியில் உள்ள ராய் பித்தோரா கலாச்சார வளாகத்தில் நேற்று தொடங்கியது. இந்த கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:

அடிமைத்தன காலத்தின்போது இந்தியாவில் இருந்து புத்தரின் நினைவுச் சின்னங்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஏலம் விடப்பட்டன. இதை மத்திய அரசு தடுத்து நிறுத்தியது. சில நிறுவனங்களின் உதவியால் சுமார் 125 ஆண்டுகளுக்குப் பிறகு புத்தரின் நினைவுச் சின்னங்கள் மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன.

கடந்த சில மாதங்களில் தாய்லாந்து, வியட்நாம், மங்கோலியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் புத்தரின் நினைவுச் சின்னங்களின் கண்காட்சி நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். பகவான் புத்தர் எல்லோருக்கும் சொந்தமானவர். அவர் ஒட்டுமொத்த உலகத்தையும் இணைக்கிறார்.

எனது வாழ்க்கைக்கும் பகவான் புத்தருக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனது சொந்த ஊரான வட்நகர், புத்த மத போதனைகளின் மிக முக்கிய மையமாக விளங்கியது. தற்போது நான் வாராணசி எம்பியாக உள்ளேன். எனது தொகுதியில் உள்ள சாரநாத்தில் புத்தர் தனது முதல் போதனையை தொடங்கினார்.

பிரதமர் என்ற வகையில் சீனா, ஜப்பான், மங்கோலியா, இலங்கை, சிங்கப்பூரில் உள்ள புத்த மதத் தலங்களை பார்வையிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் சீனா, ஜப்பான், கொரியா, மங்கோலியாவுக்கு செல்லும் போதெல்லாம் போதி மரக் கன்றுகளையும் எடுத்துச் செல்கிறேன்.

மத்திய அரசு சார்பில் நாடு முழுவதும் உள்ள புத்த வழிபாட்டு தலங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. காஷ்மீரின் பாரமுல்லாவில் சுமார் 2,500 ஆண்டுகள் பழைமையான புத்த வழிபாட்டுத் தலம் சில மாதங்களுக்கு முன்பு கண்டறியப்பட்டது. அதை பாதுகாத்து, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. புத்தர் பாலி மொழியில் போதனை செய்தார். அந்த மொழிக்கு, செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. புத்தரின் போதனைகளை இந்தியா பின்பற்றுகிறது. இதன் காரணமாகவே இது போருக்கான காலம் இல்லை என்று கூறி வருகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## மரபணு மாற்றம் மூலம் முள் இல்லாத மீன்: சீன விஞ்ஞானிகள் அசத்தல்

பெய்ஜிங், ஜன.5-

மீன் சாப்பிடுவதில் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை அதில் இருக்கும் முள்தான். அதனால் மீனை சாப்பிடும் போது அதிக கவனம் தேவைப்படும். இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மரமணு மாற்றம் மூலம் முள் இல்லாத மீன் வகையை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

‘கிபல் கார்ப்' என்ற நன்னீர் மீன் வகையை சீன விஞ்ஞானிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர். இதில் வழக்கமாக ஆங்கில எழுத்து ‘ஒய்' வடிவில் 80 சிறிய முள்கள் இருக்கும். இந்த முள் உருவாக்கத்துக்கு ‘ரன்எக்ஸ்2பி' என்ற மரபணுதான் காரணம் என கண்டறியப்பட்டது.

சிஆர்ஐஎஸ்பிஆர், சிஏஎஸ் என்ற மூலக்கூறு கத்தரி மூலம் முள் வளர்ச்சிக்கு காரணமான இந்த மரபணு நீக்கப்பட்டது. அதன்பின் ‘கிபல் கார்ப்' மீன் குஞ்சுகளை உருவாக்கியபோது, முற்றிலும் முள் இல்லாத மீன் உருவானது. இந்த மரபணு

மாற்றம் மூலம் மீனின் இயல்பான வளர்ச்சியில் எந்த மாற்றமும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த மீன் தற்போது சீனாவில் பிரபலமடைந்துள்ளது. இது குறித்த ஆய்வறிக்கை மீன்வளர்ப்பு இதழ் ஒன்றில் வெளியாகியுள்ளது.

சீன அறிவியல் அகாடமி விஞ்ஞானிகள் ‘ஜோங்கே எண்.6' என்ற மீன் வகையிலும் மரபணு மாற்றம் செய்து முள் இல்லாத மீனாக உருவாக்கி யுள்ளனர். இவற்றில் இருந்த சிஜிரன்எக்2பிஏ மற்றும் பி மரபணுதான் முள் வளர்ச்சிக்கு காரணம் என கண்டறியப்பட்டு அதில் மாற்றம் செய்யப்பட்டது.

## ‘லயோலா' வெளியிட்டது கருத்துக் கணிப்பு அல்ல; கருத்து திணிப்பு : பாஜக விமர்சனம்

சென்னை, ஜன.5-

"தமிழகத்தில் திமுகவை வீழ்த்தி அதிமுக,பாஜக தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை அமித் ஷா அமைப்பார்" என தமிழக பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக மீண்டும் வெற்றி பெறும், மு.க. ஸ்டாலின் தான் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார் என்றும் முதல்வர் வேட்பாளருக்கான கருத்துக் கணிப்பில் எடப்பாடி பழனிசாமியை பின்னுக்குத் தள்ளி விஜய் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார் என்றும் மிஷனரி அரசியல் செய்யும் லயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய கருத்து திணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்த கருத்துக் திணிப்பில் 81.71 சதவிகிதம் பேர் இந்துக்கள் என்றும், 10.55 சதவிகிதம் பேர் கிறிஸ்தவர்கள் என்றும், 7.75 சதவிகிதம் பேர் இஸ்லாமியர்கள் என்றும் மதவெறி அரசியலை திணித்து மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் மத ரீதியான, பிரிவினைவாத அடிப்படையில் அந்த மிஷனரி நிறுவனம் கருத்துருவாக்கத்தை உருவாக்கியது சட்டவிரோதமானது.

தமிழகத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவை வீழ்த்தி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். சனாதன தர்ம எதிர்ப்பு, இந்து விரோத அரசியல் நடத்தி சிறுபான்மை ஓட்டுக்களை பங்கு போடுவதில் திமுகவிற்கும் தமிழக வெற்றி கழகத்திற்கும் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்து தர்மத்தை சிதைக்கும் வகையில் தமிழ் கடவுளை கொச்சைப்படுத்தும் வகையில், பாசிச அரசியல் செய்யும் அரசியல் கட்சிகளை தமிழக மக்கள் விரட்டியடிப்பார்கள்.

தமிழகத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவை வீழ்த்தி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். விலைவாசி உயர்வு, கொலை கொள்ளை, போதை கலாச்சாரம், கொடுங்கோல் அவுரங்கசீப் ஆட்சி அரசியலுக்கு முடிவு கட்டும் வகையில் அரசியல் சாணக்கியர் அமித்ஷா மக்கள் விரோத தீய சக்தி திமுகவின் ஆட்சிக்கு இன்று புதுக்கோட்டையில் முழுமையான முடிவுரையை எழுத இருக்கிறார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு ஏற்றவாறு, தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு திருச்சியில் நடைபெறும் மோடி பொங்கல் நிகழ்ச்சியில் அமித்ஷா நாளை பங்கேற்கிறார். சனாதன தர்மத்திற்கு எதிராக நடந்த பல போர்களை வேரோடு வீழ்த்தி இந்து சமுதாயத்தை, தமிழ்நாட்டை காப்பாற்றி அருளிய திருச்சி ஸ்ரீ ரங்கநாதரை தரிசிக்கும் அமித் ஷா டெல்லி சென்று விட்டு அடுத்தது தமிழகம் திரும்பும் பொழுது, தேசிய ஜனநாயகக் கூட்டணி மேலும் பல முக்கிய கட்சிகளோடு மிகப்பெரும் வலிமையோடு கூட்டணி அமைத்திருக்கும்.

கடந்த 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், ஜெயலலிதா தலைமையிலான அதிமுகவை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக, வெறும் 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இது அந்த கட்சியின் வரலாற்றிலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இடங்களைக் கைப்பற்றிய தேர்தலாகும்.

அதே சூழ்நிலையை வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சந்திக்கும் வகையில் அமித் ஷாவின் தேர்தல் வியூகம் இருக்கும். திமுகவின் ஊழல் பண பல அரசியல், நடிகர் விஜய்யின் லாட்டரி அரசியல், செபாஸ்டின் சைமனின் பிரிவினைவாத அரசியல், திருமாவளவனின் பட்டியலின விரோத திருட்டு திராவிட அரசியல் என அனைத்து மக்கள் விரோத அரசியல் கட்சிகளின் பொய் முகமூடிகளின் சாயம் வெளுக்கும்.

மிஷனரி அரசியல் அமைப்புகளின் கருத்துக் கணிப்புகளையும் கருத்து திணிப்புகளையும் மாற்றி, தேசிய ஜனநாயக கூட்டணியை மகத்தான வெற்றி பெற செய்து அரசியல் சாணக்கியர் அமித் ஷா தமிழகத்தில் சரித்திரம் படைப்பார்" என்று தெரிவித்துள்ளார்.

## ரயில் சேவைகளில் மாற்றம் தெற்கு ரயில்வே அறிவிப்பு



மானாமதுரை ஜன05-

தமிழகத்தில் மின்சார பராமரிப்பு பணிகள் காரணமாக சில ரயில்கள் திருப்பிவிடப்பட்டும், சில ரயில்கள் பகுதி ரத்து செய்யப்பட்டும் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. ரயில் திருப்பிவிடல் (Diversion):

ரயில் எண்: 16848செங்கோட்டை ஸ்ரீ மயிலாடுதுறை எக்ஸ்பிரஸ்இந்த ரயில் 04, 05 மற்றும் 06 ஜனவரி 2026 தேதிகளில் காலை 7.00 மணிக்கு செங்கோட்டையில் இருந்து புறப்படும் போது, விருதுநகர், மானாமதுரை, காரைக்குடி, திருச்சிராப்பள்ளி வழியாக திருப்பிவிடப்பட்டு இயக்கப்படும். இதனால், கள்ளிகுடி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், மதுரை, கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், வடமதுரை, வையம்பட்டி, மணப்பாறை ஆகிய நிலையங்களில் நிறுத்தம் இருக்காது. இதற்கு பதிலாக,

அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, தேவகோட்டை ரோடு, காரைக்குடி, புதுக்கோட்டை, கீரனூர் ஆகிய நிலையங்களில் கூடுதல் நிறுத்தங்கள் வழங்கப்படும்.

ரயில் பகுதி ரத்து (Partial Cancellation):

ராமநாதபுரம் ராமேஸ்வரம் இடையே மேல்மட்ட மின்சார அமைப்பு பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால், 05 மற்றும் 06 ஜனவரி 2026 தேதிகளில் பின்வரும் ரயில்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.1 ரயில் எண்: 56711மதுரை ராமேஸ்வரம் பயணியர் ரயில் ராமநாதபுரம் ராமேஸ்வரம் இடையே பகுதி ரத்து.2 ரயில் எண்: 56714 ராமேஸ்வரம் மதுரை பயணியர் ரயில்ராமேஸ்வரம் – ராமநாதபுரம் இடையே பகுதி ரத்து செய்யப்பட்டது பயணிகள் பயணம் மேற்கொள்ளும் முன் ரயில் நேரம் மற்றும் மாற்றங்களை உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெற்கு ரயில்வே கேட்டுக் கொண்டுள்ளது.

## மானாமதுரை அருகே வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இருவர் கைது

மானாமதுரை ஜன05-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உட்கோட்டம், திருப்புவனம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட மணலூர் கிராமம் அருகே உள்ள மகேஷ் வேல்யூ ப்ரொடக்சன் லிமிடெட் (ரப்பர் பந்து கம்பெனி) நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த மனோசூரென் (26) மற்றும் சுஷாந்தா தேகுரி (26) ஆகியோர் கடந்த 01.01.2026 அன்று இரவு வைகை ஆற்றுக்குள் இயற்கை உபாதைக்கு சென்ற போது, அங்கு குடிபோதையில் இருந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அந்த இருவரும் வடமாநில தொழிலாளர்களை தாக்கியதில் அவர்களுக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன.

தகவல் அறிந்த மானாமதுரை துணைக் காவல் கண்காணிப்பாளர் பார்த்தீபன் மற்றும் பூவந்தி காவல் ஆய்வாளர் வாசிவம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இது தொடர்பாக திருப்புவனம் காவல் நிலையத்தில் குற்ற எண் 499/25ன் கீழ் BNS சட்டப் பிரிவுகள் 296(தீ), 118(1), 351(3) படி வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காயமடைந்த இருவரும் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளனர். சம்பவத்தில் ஈடுபட்டவர்களை பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்ட நிலையில், இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

## காமயகவுண்டன்பட்டியில் குளோரின் இன்றி குடிநீர் விநியோகம் துர்நாற்றம், நோய் அபாயம்.




கம்பம் ஜன. 05-

தேனி மாவட்டம் கம்பம் அருகே உள்ள காமயகவுண்டன்பட்டி பேரூராட்சியில், ஆற்றில் இருந்து எடுக்கப்படும் குடிநீரை எந்தவித சுத்திகரிப்பும் இன்றி நேரடியாக ஊருக்குள் விநியோகம் செய்து வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.*குடிநீரில் குளோரின் போடப்படாததுடன், நீர் தொட் டிகளும் முறையாக சுத்தம் செய்யப்படவில்லை இதனால் வீடுகளில் பிடித்து வைத்த தண்ணீரில் கடும் துர்நாற்றம் வீசுவதால் மக்கள் குடிநீரை பயன்படுத்த அச்சமடைந்துள்ளனர் மாசடைந்த குடிநீரால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டு ள்ளதாகவும், இவ்விவகாரத்தை பேரூராட்சி நிர்வாக அதிகாரியும் கண்டு கொள்ளாமல் அலட்சியம் காட்டி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. உடனடியாக குடிநீரை சுத்திகரித்து வழங்கவும், நீர் தொட்டிகளை முறையாக சுத்தம் செய்யவும் பொதுமக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.



■ சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் குறித்த சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.


## தாம்பரம் மாநகர பம்மல் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழக துனை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொங்கல் விழா நடைபெற்றது




பல்லாவரம் ஜன.5-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகர பம்மல் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழக துனை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொங்கல் விழா நிகழ்ச்சி பம்மல் வடக்கு பகுதி செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சிறு, குறு, நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துனை மேயர் கோ. காமராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துனை செயலாளர் தமிழ்மாறன், பம்மல் 1வது மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, பகுதி கழகச் செயலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், துனைத் தலைவர்கள், வட்டகழக செயலாளர்கள், மகளிரணியினர் உட்பட 1000 த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசுகையில் புதியதாக வந்த ஒருவர் திமுகதான் அரசியலில் முதல் எதிரி என கூறுகிறார். திமுக ஒரு பெரிய இயக்கம் எனவும் திமுகவை அசைத்து கூட பார்க்க முடியாது என தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து முதல் மதிப்பெண் எடுத்த சுரேஷ், சங்கரி மாணவர்களுக்கு ஊக்க தொகையும், தமிழ்நாடு அணியில் இருந்து, தேசிய அளவில் கலந்து கொள்ளும் கபடி வீராங்கனைக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கியும், விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு கிரிகெட் விளையாட்டு பொருட்கள், கால்பந்து, கேரம்போர்டு, அம்பு எரிதல் கொம்புகள், சிலம்பம், குத்துசண்டை போட்டி உபகரணங்கள், போன்றவற்றை வழங்கியும், பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்று, வெற்றிபெற்றவர்களுக்கு சுழற்கோப்பைகள் வழங்கபட்டு வாழ்த்து தெரிவித்தார். மேலும் வருகின்ற பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு புத்தாடைகளும், பொதுமக்கள் 1000 த்திற்கும் மேற்பட்டோருக்கு பொங்கல் தொகுப்பு பைகளை வழங்கி தனது வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். இதில் பல்லாவரம், பம்மல், திருநீர்மலை, பொழிச்சலூர் பகுதிகழக திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் 296வது பிறந்த நாளினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், சூரக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பத்துறையின் சார்பில் அமைந்துள்ள வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் நினைவு மண்டபத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.மாங்குடி அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டாரத்திற்குட்பட்ட அலவாக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், பேருந்து, ரயில் பயண சலுகை அட்டைகள் மற்றும் பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் ஆகியவைகளை வழங்கினார். உடன் முதல்வர் (பொ), அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, சிவகங்கை மரு.ஜடாமுனி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.அருள்தாஸ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.




## சிவகங்கை வடக்கு ஒன்றியம் இடையமேலூரில் வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

### சட்டமன்ற பொதுத் தேர்தல் நெருங்கி வரும் இந்த வேளையில் ஆளும் கட்சியான திமுக தலைமையானது மிகத் தீவிரமாக களப்பணி

சிவகங்கை ஜன05-

சிவகங்கை வடக்கு ஒன்றியம் இடையமேலூரில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது.ஒன்றிய முன்னாள் கவுன்சிலர் கருப்பணன் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் ,மாவட்ட இளைஞரணி எஸ். எம். மதிவாணன் ஆகியோரும் முன்னிலை வகித்தனர்...

சிவகங்கை வடக்கு ஒன்றியக்கழக செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.இந்த ஆலோசனை கூட்டத்தில்

ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ஏழுமலை சாமி,வேலாங்கபட்டி கிளைக் கழகச் செயலாளர் ஈசனூர் கிளைக் கழகச் செயலாளர் பூமிநாதன், காந்திநகர் கிளைக் கழகச் செயலாளர் ரவிச்சந்திரன், பாரதி நகர் கிளைக் கழகச் செயலாளர் கண்ணன், முன்னாள் கூட்டுறவு சொசைட்டி செயலாளர் இடையமேலூர் ராஜேந்திரன் , ஈசனூர் சண்முகம் கூவானிபட்டி நந்தகுமார், இடையமேலூர் ராஜா ஈசனூர் பால்சாமி, மற்றும் பி எல் ஏ 2 கிளைக் கழக இளைஞரணி நிர்வாகிகள் பாக முகவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

## இளையான்குடி காவல் நிலைய அறிவிப்பு: குற்றச்சாட்டில் தொடர்புடையவர் கைது

இளையான்குடி ஜன05-

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி:

இளையான்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பதிவான குற்ற வழக்கு எண் 276/2019ல் தொடர்புடைய நபருக்கு எதிராக காவல்துறை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 147, 448, 506 (ii) பிரிவுகள் மற்றும் TNPPDL Act பிரிவு 3ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஷிசி:160/2024 என்ற எண்ணில் விசாரணை நடைபெற்று வருகிறது.

விசாரணை முடிவில், சம்பந்தப்பட்ட நபர் கனி கனியசேகர் என்பவர், வழக்கில் ஆஜராகாததால் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்தது. இதையடுத்து, காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில், அவரை நாளை 06.01.2026 அன்று கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை இளையான்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் வெளியிட்டுள்ளார்.



## 'லயோலா' கருத்துக் கணிப்பு திமுக போடும் நாடகம் ராஜேந்திர பாலாஜி விமர்சனம்

சிவகாசி, ஜன.5-

"லயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் என்ற பெயரில் கருத்து கணிப்பு வெளியிடுபவர்களை எனக்குத் தெரியும். இது திமுக போடும் நாடகம். மக்களிடையே அது எடுபடாது" என முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்துள்ளார்.

சிவகாசியில் அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் ஞாயிற்று கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி பேசியதாவது: 2026 ம் ஆண்டு அதிமுகவுக்கானது. விருதுநகர் மாவட்டத்தில் 7 தொகுதிகளிலும் வெற்றி பெற்று பொதுச்செயலாளருக்கு வலு சேர்க்க வேண்டும்.


ராஜபாளையத்தில் 62, ஸ்ரீவில்லிபுத்தூரில் 68, விருதுநகரில் 90, சிவகாசியில் 59 பேர் என தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளுக்கு 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விருப்ப மனு தாக்கல் செய்துள்ளனர். பழனிசாமி தலைமையில் அதிமுக 100 சதவீத வளர்ச்சியை பெற்றுள்ளது. களத்திலேயே அதிமுகவுக்கும் திமுகவுக்கும் இடையே தான் போட்டி. வருபவர்கள் வரட்டும்.

இருப்பவர்களை வைத்துக் கொண்டு வெற்றி பெறும் வல்லமை பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு உண்டு. நாம் நினைக்கின்ற கூட்டணியை பொதுச் செயலாளர் அமைக்க உள்ளார். பிரச்சினைகள் தீர்ந்து, வெற்றியை நோக்கி நமது கூட்டணி நகர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் எந்த ஐயமும் வேண்டாம் வெற்றி அதிமுகவுக்கு தான்.

திமுக ஆட்சியாளர்களால் என் மீது பல்வேறு வழக்குகள் நெருக்கடிகள் வந்த போது, அதிமுகவையும் தலைமையையும் விட்டுக் கொடுத்து பேசியது கிடையாது. திமுக ஆட்சியால் நாம் மட்டுமல்ல தமிழக மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் தான் திமுகவை தோற்கடிக்க கூடியவர்கள், நாங்கள் ஆதரித்தால் தான் ஆட்சி அமைக்க முடியும், புதிய வரலாறு, வெளிச்சமான தலைவர் என கூறுபவர்களுக்கு 234 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தும் பலம் உள்ளதா.

பூத் அமைப்பே இல்லாத சிலர் சித்து விளையாட்டை விளையாடி வருகின்றனர். தேர்தல் களம் என்பது அதிமுகவுக்கும் திமுகவுக்கும் இடையே தான். திரையில் பார்த்தவர்களை நேரில் பார்க்க ஆசைப்படுவது இயல்பு. யார் வந்தாலும் கூட்டம் கூடும். லயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் என்ற பெயரில் கருத்து கணிப்பு வெளியிடுபவர்களை எனக்குத் தெரியும். இது திமுக போடும் நாடகம். மக்களிடையே அது எடுபடாது. இந்த கருத்துக் கணிப்பை பொய்யாக்கி அதிமுக பாஜக கூட்டணி வெற்றி பெற நாம் உழைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்

# தைப்பூசம் 2026 எப்போது? முருகன் அருளால் வாழ்க்கை மாற இதை மட்டும் பண்ணுங்க



முருகப் பெருமானின் அருளை பெறுவதற்குரிய மிக முக்கியமான விரத நாட்களில் ஒன்று தைப்பூசம். தை மாதத்தில் வரும் இந்த நாளில் விரதம் இருந்து வழிபட்டால் முருகப் பெருமானின் அருள் கிடைக்கும். குறிப்பாக இந்த நாளில் வேல் வழிபாடு செய்வது மிகவும் விசேஷமானதாகும். தைப்பூச திருநாள் ஏன் இத்தனை சிறப்புமிக்கதாக கருதப்படுகிறது, இந்த நாளில் விரதம் இருந்தால் என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

முருகப் பெருமானுக்குரிய மிக முக்கியமான வழிபாட்டு தினங்களில் ஒன்று தைப்பூசம். தை மாதத்தில் வரும் பூசம் நட்சத்திரமும், பௌர்ணமியும் இணைந்து வரும் நாளை தைப்பூச திருநாளாக கொண்டாடுகிறோம். இது தீமையை, நன்மை வெற்றி கொண்ட நாளாக கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதிலும் உள்ள முருக பக்தர்கள் இந்த நாளில் விரதம் இருந்து, பக்தியுடன் தங்களின் வேண்டுதலை நிறைவேற்றுவது வழக்கம். இந்தியா மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, அமெரிக்கா, கனடா உள்ளிட்ட பல நாடுகளிலும் உள்ள முருக பக்தர்கள் இந்த நாளில் விழா எடுத்து கொண்டாடுவது உண்டு.

புராணக் கதைகளின் படி, முருகப் பெருமான் தேவர்களின் சேனாதிபதியாக கருதப்படுகிறார். சூரபத்மனை வதம் செய்வதற்காக அன்னை பார்வதியிடம் இருந்து, முருகப் பெருமான் வேல் வாங்கிய தினமாக தைப்பூச திருநாள் குறிப்பிடப்படுகிறது. முருகப் பெருமானின் திருக்கைகையில் இருக்கும் வேல், ஞானத்தின் வடிவமாக கருதப்படுகிறது. இது பிரம்ம ஞானத்தின் அடையாளமாகவும் சொல்லப்படுகிறது. உலகத்தை தீய சக்திகளிடம் இருந்து காத்து, அனைவருக்கும் நன்மைகளை வழங்குவதற்காக பார்வதி தேவி, வேல் என்னும் ஆயுதத்தை முருகப் பெருமானுக்கு அளித்ததாக சொல்லப்படுகிறது.

இதனால் தைப்பூச திருநாள் அன்று விரதம் இருந்து, முருகப் பெருமானை பக்தியுடன் வழிபட்டால் கெட்ட கர்மாக்கள் அனைத்தும் அழிந்து வாழ்க்கையே மாறும். நன்மைகள் அதிகரிக்கும் என சொல்லப்படுகிறது. தைப்பூசத்தில் முருகனின் அருளை பெற வேண்டும் என்பதற்காக சிலர் 48 நாட்களும், சிலர் ஒரு மாதமும் விரதமும் இருப்பது உண்டு. முடியாதவர்கள் தைப்பூசம் அன்று மட்டும் விரதம் இருந்து முருகனை வழிபடுவார்கள். தைப்பூசம் அன்று காவடி எடுத்தும், பால்குடம் சுமந்தும், அலகு குத்தியுடன், பாத யாத்திரையாக சென்றும் பக்தர்கள் தங்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுவது உண்டு. ஏதாவது வேண்டுதல் வைத்து, தைப்பூசம் அன்று முருகனுக்கு விரதம் இருந்தால் அது நிச்சயம் நிறைவேறும் என்பது நம்பிக்கை. அப்படி வேண்டுதல் நிறைவேறியவர்கள் முருகனுக்கு பால்குடம் ஏந்தி சென்று, அந்த பாலால் அபிஷேகம் செய்து வழிபடுவார்கள்.

தைப்பூசம் அன்று காலை முதல் உபவாசமாக இருந்து விரதம் இருக்கலாம். முடியாதவர்கள் பால், பழம் மட்டும் சாப்பிட்டு விரதம் இருந்து விரதம் இருக்கலாம். முருகனின் பாடல்களை பாடியும், முருக மந்திரங்களையும் மனதார சொல்லி வழிபட வேண்டும். அருகில் இருக்கும் முருகன் கோவிலுக்கு சென்று முருகனை தரிசித்து வழிபடலாம். கோவிலுக்கு செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே முருகனின் படத்திற்கு முன் விளக்கேற்றி, மனமுருகி முருகனை வழிபடலாம்.

இந்த ஆண்டு தைப்பூச திருநாள் பிப்ரவரி 01ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று வருகிறது. அன்றைய தினம் காலை 04.41 மணி துவங்கி, பிப்ரவரி 02ம் தேதி காலை 04.43 வரை பௌர்ணமி திதி உள்ளது. அதே போல் பிப்ரவரி 01ம் தேதியன்று அதிகாலை 01.54 மணிக்கு துவங்கி, பிப்ரவரி 02ம் தேதி அதிகாலை 01.01 மணி வரை பூசம் நட்சத்திரம் உள்ளது. இதனால் பிப்ரவரி 01ம் தேதியன்று அதிகாலையிலேயே எழுந்து குளித்து விட்டு, பக்தர்கள் விரதத்தை துவங்கி விட வேண்டும்.

தைப்பூசம் அன்று விரதம் இருந்து வழிபட்டால் தீராத பகை, துன்பம் ஆகியவற்றில் இருந்து விடுபடலாம். உறவுகளுக்குள் இருந்த பகை மாறி ஒற்றுமை ஏற்படும். தீமைகளில் இருந்து விடுபடலாம். முருகப் பெருமானின் அருளும், பாதுகாப்பும் எப்போதும் கிடைக்கும்.

# சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில்: ஆரோக்கியத்தோடு ஆனந்தமும் அருளும் ஈசன்

ஈசன் கோயில்கொண்ட தலங்கள் ஏராளம் ஏராளம். அவற்றில் அவர் மருந்தீஸ்வரராக வைத்தியநாதராக நோய் நொடிகள் நீக்கும் வரம் அருள்பவராகக் கோயில்கொண்ட தலங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அப்படிப்பட்ட தலங்களில் முக்கியமானது திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயில். சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் திருவான்மியூரில் அமைந்திருக்கும் இந்தக் கோயில் புராணகால சிறப்பு பெற்றது.

`வான்மீகம்' என்று சொல்லப்படும் புற்றுகள் நிறைந்த இடம் என்பதால், இது `வான் மிகியூர்' என்றானது என்கிறார்கள். வால்மீகி முனிவர், தனது களவு வாழ்க்கையின் சாபங்கள் தீர மார்க்கண்டேய மகிரிஷியின் வாக்குப்படி சிவத்தலங்களை தரிசனம் செய்துவந்தார். அப்போது இந்த ஆலயத்தின் வடமேற்கு மூலையில் இருக்கும் வன்னி மரத்தடியில்தான் தவமிருந்து, ஈசனைத் தரிசித்து சுயம்புலிங்கத்தை பெற்றார் எனவும் தலவரலாறு கூறுகிறது. மேலும் திருவான்மியூரிலேயே வால்மீகி முனிவரின் ஜீவசமாதியில் இருந்து வருகிறது என்றும் கூறப்படுகிறது.

தொண்டை மண்டலத்தின் மயிலைக்கு அடுத்து திருவான்மியூரே சிறப்பானது என்று போற்றுகிறார்கள் அடியவர்கள். இங்குதான் 7 ம் நூற்றாண்டில் சோழர்களால் கட்டப்பட்ட மருந்தீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. பாவநாசினி, ஜன்மநாசினி என இரு திருக்குளங்களைக் கொண்டு கிழக்கு நோக்கி ஆலயம் அமைந்துள்ள இந்தத் திருக்கோயிலில் கணபதி, முருகர், தட்சிணாமூர்த்தி, துர்கை... எனப் பரிவார தெய்வங்களோடு ஆலயம் சிறப்புற பிரமாண்டமாக இருந்து வருகிறது.

சந்திரனும் சூரியனும் ஒருசேர இங்கு வந்து வழிபட்டதால், மற்ற கிரகங்கள் இங்கு மறைந்து நின்றன எனவும், அதனாலேயே இங்கு நவகிரக சந்நிதி கிடையாது என்றும் கூறப்படுகிறது. அருள் வழங்கும் அன்னை உமையவள் இங்கு `சொக்கநாயகி' எனும் திரிபுரசுந்தரியாக நின்ற கோலத்தில் காட்சிதருகிறாள். மனமுருகி தன்னைத் தொழுவோருக்கு அருள்பாலிக்கும் இந்த அன்னை பாசம், அங்குசம் தாங்கி, அபய வரத ஹஸ்தம் காட்டும் திருக்கரங்களோடு அடைக்கலம் தந்துவருபவள் அன்னை திரிபுரசுந்தரி. அன்னையின் ஆலயத்தின் வெளிப்புறம் தூணில் இருக்கும் சரபேஸ்வரர் வெகு சிறப்பானவர்.

புராண காலத்தில் வசிஷ்ட மாமுனியின் யாகத்தில் பால் சொரிய தாமதித்த காரணத்தால் காமதேனு சாபம் பெற்றது. இதன் காரணமாக சாதாரணப் பசுவாக மாறி, பூலோகம் வந்தது. தன் சாபம் நீங்கப் பூவுலகின் புண்ணிய க்ஷேத்திரமான திருவான்மியூர் வந்தடைந்தது அந்தத் தெய்வப் பசு. ஓங்கி, உயர்ந்து நின்ற புற்றுகளிடையே இருந்த சுயம்புலிங்கத்தை கண்டு அதன் மீது பால் சொரிந்து தன் சாபம் தீருமாறு வேண்டிக்கொண்டது. அப்போது அதன் கால்குழம்பு தெரியாமல் லிங்கத் திருமேனியில் பட அது அப்படியே தடமாகப் பதிந்தது. இன்றும் பால்வண்ணநாதர் அந்தக் குழம்புத் தழும்போடு இத்தலத்தில் காட்சி அருள்கிறார்.

அகத்தியருக்கு ஈசன் இத்தலத்திலும் திருமணக் கோலம் காட்டி அருளினார். மேலும் இந்த உலகம் உய்ய சித்த வைத்திய முறைகளை இங்குள்ள வன்னி மரத்தின் அடியில்தான் உபதேசம் செய்தார். எனவே இந்தத் தலம் அகத்தியரையும் வழிபட உகந்த தலம். ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாத பிரம்மோற்சவத்தின் ஒன்பதாம் நாள் உற்சவத்தின் போது ஈசன் அகத்தியருக்கு திருக்காட்சி அருளிய நிகழ்வு நிகழ்த்தப்படுகிறது. மேலும் வால்மீகி முனிவருக்கும் நடனக் காட்சி அருளிய சம்பவமும் நிகழ்த்தப்படும்.

இந்த ஆலயத்தின் பழைமையை உணர்த்தும் வகையில் பல்வேறு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சோழர்கால கல்வெட்டுகள் பல இங்கு காணப்படுகின்றன. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய இருவராலும் பாடல்பெற்றது இத்தலம்.

இத்தல ஈசனின் திருமேனி மேற்கு நோக்கி அருள்கிறது. ஆதியில் ஈசன் கிழக்கு நோக்கியே கோயில் கொண்டிருந்தார் என்றும் அவர் மேற்கு நோக்கித் திரும்பியதன் பின்னணியில் ஒரு சம்பவம் உண்டு என்றும் சொல்கிறார்கள். அந்த சம்பவம் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

# நியூஸி. உடனான ஒருநாள் கிரிக்கெட் தொடர்: ஷூப்மன் கில் தலைமையில் இந்திய அணி அறிவிப்பு




நியூஸிலாந்து அணி உடனான ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்துள்ளது. ஆஸ்திரேலிய தொடரின் போது காயமடைந்த ஸ்ரேயஸ் ஐயர் அணிக்குள் இந்த தொடர் மூலம் திரும்பி உள்ளார்.

நியூஸிலாந்து அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 டி20 கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இதில் ஒருநாள் தொடர் வரும் 11ம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில், இந்த தொடருக்கான இந்திய அணியை பிசிசிஐ அறிவித்துள்ளது.

இதில் மொத்தம் 15 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். அணியில் முகமது சிராஜ், ஸ்ரேயஸ் ஐயர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். தென் ஆப்பிரிக்க உடனான ஒருநாள் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய ருதுராஜ் கெய்க்வாடுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. கே.எல்.ராகுல் மற்றும் ரிஷப் பந்த் ஆகியோர் விக்கெட் கீப்பர்களாக அணியில் உள்ளனர். அனுபவ வீரர்களான ரோஹித் சர்மாவும், விராட் கோலியும் இந்த தொடரில் விளையாடுகின்றனர்.

இந்திய அணி: ஷூப்மன் கில் (கேப்டன்), ஸ்ரேயஸ் ஐயர் (துணை கேப்டன்), ரோஹித் சர்மா, விராட் கோலி, கே.எல்.ராகுல், வாஷிங்டன் சுந்தர், ரவீந்திர ஜடேஜா, முகமது சிராஜ், ஹர்ஷித் ராணா, பிரசித் கிருஷ்ணா, குல்தீப் யாதவ், ரிஷப் பந்த், நிதிஷ் குமார் ரெட்டி, அர்ஷ்தீப் சிங், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

# அக்சர் அதிரடி சதத்தால் குஜராத் வெற்றி: விஜய் ஹசாரே கோப்பை தொடர்




விஜய் ஹசாரே கோப்பைக்கான கிரிக்கெட் லீக் போட்டியில் குஜராத் அணி 7 ரன்கள் வித்தியாசத்தில் ஆந்திரா அணியை வென்றது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 318 ரன்கள் குவித்தது. குஜராத் அணி வீரர் அக்சர் படேல் 111 பந்துகளில் 130 ரன்கள் (10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்) விளாசினார். விஷால் ஜெய்ஸ்வால் 70 ரன்கள் குவித்தார்.

பின்னர் விளையாடிய ஆந்திர அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 311 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 7 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத் வெற்றி கண்டது. ஆந்திர அணியின் சிஆர் ஞானேஸ்வர் 102, எஸ்டிஎன்வி பிரசாத் 48 ரன்கள் எடுத்தனர். குஜராத் அணியின் ரவி பிஷ்னோய் 3, அக்சர் படேல், அர்சான் நாக்வாஸ்வாலா ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

# ஹாக்கி இந்தியா லீக்: தமிழ்நாடு டிராகன்ஸ் அபாரம்



ஹாக்கி இந்தியா லீக் ஆடவர் போட்டியில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணி 42 என்ற கோல் கணக்கில் ஹைதராபாத் தூபான்ஸ் அணியை வீழ்த்தியது.

ஹாக்கி இந்தியா லீக் ஆடவர் போட்டியின் முதல் கட்ட ஆட்டங்கள் சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் தொடங்கின. இரவு 7.30 மணிக்கு நடைபெற்ற முதல் போட்டியில் அக்கார்ட் தமிழ்நாடு டிராகன்ஸ் அணியும், ஹைதராபாத் தூபான்ஸ் அணியும் மோதின.

இதில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா 3 கோல்கள் போட்டு சமநிலையில் இருந்தன. இதையடுத்து வெற்றியைத் தீர்மானிக்க ஷூட்அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணியினர் 4 கோல்களும், ஹைதராபாத் அணியினர் 2 கோல்களும் அடித்தனர்.

இதைத் தொடர்ந்து ஷூட்அவுட் அடிப்படையில் 42 என்ற கோல் கணக்கில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணி வெற்றி கண்டது.

தமிழ்நாடு டிராகன்ஸ் அணிக்காக சோபர்ஸ்பி தாமஸ், உத்தம் சிங், கார்த்தி செல்வம் ஆகியோரும், ஹைதராபாத் அணிக்காக அமன்தீப் லக்ரா 2 கோல்களும், ஆர்த்தர் டி ஸ்லூவர் ஒரு கோலும் அடித்தனர். ஷூட்அவுட்டில் தமிழ்நாடு டிராகன்ஸ் அணிக்காக நேதன் எப்ரம்ஸ், பிளேக் கோவர்ஸ், உத்தம் சிங், முகமது ரஹீல் ஆகியோர் கோலடித்தனர். ஹைதராபாத் அணிக்காக ஜக்காரி வாலஸ் 2 கோல்களை அடித்தார்.



# சூரியின் 'மண்டாடி'க்காக 60 நாள் ஆக்ஷன் காட்சி ஷூட்டிங்

சூரி ஹீரோவாக நடிக்கும் படம் 'மண்டாடி'. மதிமாறன் புகழேந்தி இயக்கும் இந்தப் படம், படகுப் பந்தயத்தை மையமாகக் கொண்டு உருவாகிறது. ஆர்.எஸ்.இன்ஃபோடெயின்மென்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரிக்கும் இப்படத்தில் தெலுங்கு நடிகர் சுஹாஸ், மஹிமா நம்பியார், சத்யராஜ், ரவீந்திரா விஜய், அச்யுத் குமார், சாச்சனா நமிதாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ஜி.வி.பிரகாஷ் இசை அமைக்கிறார். எஸ்.ஆர்.கதிர் ஒளிப்பதிவு செய்கிறார். தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் உருவாகிறது. இந்நிலையில் இப்படம் 2026ம் ஆண்டு கோடையில் வெளியாக இருப்பதாகப் படக்குழு தெரிவித்துள்ளது. "படத்தில் இடம்பெறும் படகுப்பந்தய காட்சிகள், இதுவரை காணாத புதிய திரை அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் காட்சிகள் தத்ரூபமாகவும், எதார்த்தமாகவும் திரையில் கொண்டு வர, சர்வதேச ஆக் ஷன் நிபுணர்களுடன் இணைந்து படக்குழு பணியாற்றியுள்ளது. பிரபல ஸ்டன்ட் இயக்குநர் பீட்டர் ஹெய்ன் சண்டைக் காட்சிகளை அமைத்துள்ளார். சுமார் 60 நாட்கள் இந்தப் படத்துக்காக அவர் பணியாற்றி உள்ளார். ரூ.75 கோடி செலவில் உருவாகியுள்ள இந்த படம், சூரியின் நடிப்பில் முதல் பிரம்மாண்டப் படமாக இருக்கும்" என்று தயாரிப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'திரவுபதி 2'வில் முதன்மை வில்லனாக சிராக் ஜானி



ரிச்சர்ட் ரிஷி, ரக்ஷனா இந்துசுதன், நட்டி நடராஜ், ஒய்.ஜி.மகேந்திரன், சரவண சுப்பையா என பலர் நடித்துள்ள படம், 'திரவுபதி 2'. மோகன் ஜி இயக்கியுள்ள இப்படத்துக்கு ஜிப்ரான் இசை அமைத்துள்ளார்.

நேதாஜி புரொடக்ஷன்ஸ், சோழ சக்ரவர்த்தி மற்றும் ஜி.எம். ஃபிலிம் கார்ப்பரேஷன் இணைந்து தயாரித்துள்ள இப்படத்துக்குத் தணிக்கை குழு யு/ஏ சான்றிதழ் கொடுத்துள்ளது. இதில் மூன்று வில்லன்கள் நடித்துள்ளனர். அதில் முதன்மை வில்லனாக சிராக் ஜானி நடித்துள்ளார். அவரை படக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

இயக்குநர் மோகன் ஜி கூறும்போது, "முகமது பின் துக்ளக் கதாபாத்திரத்தில் சிராக் நடித்துள்ளார். வெறும் வில்லனாக மட்டுமல்லாது புத்திசாலித்தனம் நிறைந்த தனது சொந்த முடிவுகளின் விளைவுகளைத் தைரியமாக எதிர்கொள்பவராக வருகிறார்.

உடல் ரீதியாக வலுவாகவும் அதேநேரம், சிறந்த நடிப்பை உணர்வுபூர்வமாக கொண்டு வரும் வகையிலான நடிகரை எதிர்பார்த்தோம். சிராக் முழு ஈடுபாட்டுடன் அந்த கதாபாத்திரத்துக்குத் தேவையான நடிப்பைக் கொடுத்துள்ளார்" என்றார். இப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை விரைவில் வெளியாக இருக்கிறது.



# ஜனநாயகன் + பராசக்தி: தணிக்கை சிக்கலும், தவிக்கும் திரையரங்குகளும்!

'ஜனநாயகன்' மற்றும் 'பராசக்தி' ஆகிய படங்களுக்கு இன்னும் தணிக்கைச் சான்றிதழ் கிடைக்கப் பெறாததால் திரையரங்க உரிமையாளர்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள்.

விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' மற்று சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' ஆகிய படங்கள் பொங்கல் வெளியீடாக திரைக்கு வரவுள்ளன. இந்த இரண்டு படங்களுமே தணிக்கைப் பிரச்சினையில் சிக்கியிருக்கின்றன. 'ஜனநாயகன்' படத்தில் சில காட்சிகளுக்கு மியூட் மற்றும் சில ரத்தக் காட்சிகளை சரி செய்ய சொல்லியிருக்கிறார்கள். இதனை முடித்துக் கொடுத்துவிட்டது படக்குழு. ஆனால், தணிக்கைச் சான்றிதழ் இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

அதே போல் 'பராசக்தி' படத்தின் பின்னணி இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பதால் தணிக்கை அதிகாரிகள் சில காட்சிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள்.

இதனால் படக்குழுவினர் டெல்லியில் மறுதணிக்கைக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் பார்த்துவிட்டு சான்றிதழ் தரவேண்டும். இந்த இரண்டு படங்களின் தணிக்கைச் சான்றிதழும் கிடைக்கப் பெறாததால், இன்னும் டிக்கெட் முன்பதிவு தொடங்கப்படாமல் உள்ளது. தணிக்கைச் சான்றிதழ் கிடைத்தால் மட்டுமே, திரையரங்க உரிமையாளர்கள் தரப்பில் இருந்து டிக்கெட் முன்பதிவினை தொடங்குவது என்பது வழக்கம். இன்னும் சான்றிதழ் கிடைக்கப் பெறாததால், எப்போது டிக்கெட் முன்பதிவினை தொடங்குவது என காத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி சில வெளிநாட்டிலும் தணிக்கைச் சான்றிதழ் இல்லாமல் அனைத்து பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. இரண்டுமே பெரிய நடிகரின் படங்கள், பெரிய முதலீடு என்பதால் தணிக்கைச் சான்றிதழ் கிடைக்கப் பெறாமல் இரண்டு தயாரிப்பாளர்களும் காத்திருக்கிறார்கள். இதற்கிடையே இந்த தணிக்கைச் சான்றிதழ் பிரச்சினையை முன்வைத்து அரசியல் காரணங்களும் பின்னணியாக இருக்கும் எனவும் தகவல்கள் பரவி வருகின்றன.

# வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்தநாள் விழா



நிலக்கோட்டை, ஜன.5-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் தமிழ்நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டு ஒன்றியம் கழக சார்பாக வீரபாண்டிய கட்டபொம்மனின் 265 வது பிறந்த நாளை முன்னிட்டு நிலக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக தொடங்கி மேளதாளம் முழங்க வானவேடிக்கையுடன் தேவராட்டம் ஆடி நிலக்கோட்டை நால்ரோடு அருகே மினி பஸ் ஸ்டாண்டில் இந்திய சுதந்திரத்திற்காக முதன் முதலில் வீர முழக்கமிட்ட மாவீரர் மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து பிறந்தநாள் விழாவை கொண்டாடினார்கள். அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் தொட்டிய நாயக்கர் ராஜகம்பளம் சமுதாய மக்களுக்கு 27 மாவட்டங்களில் டி .என். சி / டி. என். டி சாதி சான்றிதழ் வழங்குவதை போல் திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களில் வாழும் நமது சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டும் என வலியுறுத்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டு தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர். விழாவில் தமிழ்நாடு வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டு கழகம்நிலக்கோட்டை ஒன்றிய தலைவர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் துரைப்பாண்டி மற்றும் கூவனூத்து முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அன்பழகன், ஒன்றிய பொறுப்பாளர்கள் ரெங்கநாதன், வீரகாமு, வீரமணி ,சக்திவேல், கார்த்திக், சென்ராயன், பாலமுருகன் உட்பட 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



## பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வாக்குசாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல், நீக்கல் மற்றும் திருத்தல் செய்யும் வாக்காளர் சிறப்பு முகாமை ஆய்வு

பம்மல் ஜன 05-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட வாக்குசாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்தல், நீக்கல் மற்றும் திருத்தல் செய்யும் வாக்காளர் சிறப்பு முகாமை, கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா, பல்லாவரம் சட்டமன்றதொகுதி பொறுப்பாளர் ரபி அகமது,, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன்பகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் இருந்தனர்.



## இளையான்குடி வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம்

இளையான்குடி, ஜன. 05-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய பேரூர் திமுக சார்பில், இளைஞர் அணி கிளை அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் இளையான்குடியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பொற்கோ தலைமை தாங்கினார்.

இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சுப. மதியரசன், பேரூர் செயலாளரும் பேரூராட்சி தலைவருமான பா. நஜுமுதீன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மலைச்சாமி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் பைரோஸ் கான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பாண்டிச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சம்பத் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் இளையான்குடி பேரூராட்சி துணைத் தலைவர் டி.கே. இப்ராஹிம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, அவைத் தலைவர்கள் பெரியசாமி, அஜுஸ் கான், ஒன்றிய துணை செயலாளர்கள் சிவனேசன், ராஜேந்திரன், மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கண்ணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மணி, துரைமுருகன், நாகராஜன், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் பிரபு உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், வரும் 24ஆம் தேதி விருதுநகரில் நடைபெறும் மாநாட்டில் திரளாக கலந்து கொள்வது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கு தமிழாசிரியர் சங்கம் வரவேற்பு

சென்னை ஜன05-

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்த புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் நீ. இளங்கோ வரவேற்றார்.

அலுவலர்கள் கடைசி ஊதியத்தின் 50% ஓய்வூதியமாக பெறுவர். ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை உயர்வு வழங்கப்படும்.

ஓய்வூதியதாரர் இறந்தால் குடும்ப உறுப்பினர்களுக்கு 60% குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். பணிக்காலத்திற்கு ஏற்ப பணிக்கொடை 25 லட்சம் வரை வழங்கப்படும்.

பணி ஓய்வு பெறும் அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியமும், இடைப்பட்ட கால ஓய்வூதியற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியமும் வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசு, கடுமையான நிதிசூழலிலும், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் நலன்களையும் குடும்ப எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும் பணப் பயன்களையும் வழங்குவதில் உறுதியானது.



■ சிவகங்கை மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் தேசிய சுகாதார இயக்கத்தின் குழும இயக்குநர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் அவர்கள் வாக்காளர்களுக்கான பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி. அவர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள் தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ்,இ.ஆ.ப., அவர்கள் (184 காரைக்குடி சட்டமன்ற தொகுதி), சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா (186 சிவகங்கை சட்டமன்ற தொகுதி). உதவி ஆணையர் (கலால்) திரு.சிவபாலன் (185திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. ஐ.சையது முகைதீன் இப்ராகிம் (187 மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதி), அனைத்து உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.




## திருமாஞ்சோலை மாதிரி பள்ளியில் சங்கமம் விழா

சிவகங்கை, ஜன.5-

சிவகங்கை அருகில் திருமாஞ்சோலை ஏனாதியில் அமைந்துள்ள மாவட்ட அளவிலான மாதிரிப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள் பங்கேற்கும் சங்கமம் விழா தலைமைஆசிரியர் காளிதாஸ் தலைமையில் நடைபெற்றது.

விடுதிக்காப்பாளர் சக்திமுருகன் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் அன்புத்துரை கலந்து கொண்டு மாணவர்களுக்கு தன்னம்பிக்கை உரை ஆற்றினார். நிறைவில் ஆசிரியை உஷாதேவீ நன்றியுரை ஆற்றினார்.

ஆசிரியை கிருஷ்ஷ்ணவேனி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் டியர் ஜீனியர் என்ற மாணவர்களுக்கான பத்திரிக்கை வெளியிடப்பட்டது. முன்னாள் மாணவர்களுக்கு பள்ளியின் சார்பில் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது விழாவில் டியர் ஜீனியர்ஸ்" எனும் பத்திரிக்கையினை முன்னாள் பி.டி.ஓ. அன்புத்துரை வெளிட தலைமை ஆசிரியர் காளிதாஸ் பெற்றுக்கொண்டார்.

## கோவை பேரவையினர் சட்டப் போராட்டம் நடத்தியதால்தான் அகவிலைப்படி உயர்வு

கோவை, ஜன.5-

அன்பார்ந்த போக்குவரத்து கழக ஓய்வு பெற்ற தொழிலாளர் நண்பர்களே போக்குவரத்து ஓய்வூதியராக நாம் அனைவரும் பெற இருக்கின்ற ஓய்வூதியத்தில் 58% மற்றும் 257 சதவீதத்தை முழுமையாக பெற இருக்கிறோம். பத்தாண்டு காலமாக அகவிலைப்படி, உயர்வை வழங்காமல் வஞ்சித்த தமிழக அரசை எதிர்த்து உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற வரை சென்று கோவை பேரவையினர் சட்டப் போராட்டம் நடத்தியதால்தான் அகவிலைப்படி உயர்வு என்னும் வெற்றிக்கனியை ஓய்வூதியர் ஆகிய நாம் சுவைக்க முடிந்தது. நமது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொடுத்த பெருமை கோவை பேரவையை மட்டுமே சாரும் இதில் வேறு எந்த சங்கத்திற்கும் பங்கு போட உரிமை கிடையாது என்பதை அனைவரும் அறிந்ததே. இன்னும் நாம் பெறவேண்டிய அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை, ஊதிய உயர்வு ஒப்பந்த பலன்கள், மற்றும் குடும்ப சேம நலநிதி வழக்கு போன்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதால் நாம் அதிக அளவில் கோவை பேரவையுடன் இணைக்கப்பட்ட சங்கங்களில் உறுப்பினராகியும் வழக்கு நிதி அளித்தும் கோவை பேரவையின் கரத்தை பலப்படுத்த ஊன்றுகோலாக இருப்போமாக.



■ மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் திருப்பூர் மாவட்டம், ருத்ராவதி பேரூராட்சி. முத்தனம்பட்டி தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாம்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ்ராஜா அவர்கள் உள்ளார்.

## தாராபுரத்தில் த.வெ.க செயல்வீரர் கூட்டம், செங்கோட்டையன் பங்கேற்பு

### 2026ல் விஜய் முதலமைச்சர், அவரை ஏற்றுக்கொள்பவர்களுடன் மட்டுமே கூட்டணி செங்கோட்டையன் பேச்சு.

திருப்பூர், ஜன.5-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க) தாராபுரம் காங்கேயம் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயல்வீரர் கூட்டம், உடுமலை சாலையில் உள்ள அரிமா அரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ் தலைமை வகித்தார். இதில் முன்னாள் அமைச்சரும், த.வெ.க மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளருமான கே.ஏ. செங்கோட்டையன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நேற்று இரவு 7 மணியளவில் தாராபுரம் நஞ்சியம்பாளையம் பகுதியில் த.வெ.க வடக்கு ஒன்றிய செயலாளர் ஸ்ரீகாந்த் தலைமையில் செங்கோட்டையனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெண்கள் ஆரத்தி எடுத்து, பட்டாசு வெடித்து வரவேற்றனர். இதனால் சாலை முழுவதும் தொண்டர்கள் திரண்டதால், சில நேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து வடதாரை, காமராஜபுரம், அண்ணா சிலை அலங்கியம் ரோடு, பெரிய காளியம்மன் கோவில் அருகே உள்ளிட்ட பகுதிகளில் தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர். அப்போது அம்பேத்கர் வேடமணிந்து வந்த த.வெ.க தொண்டர் ராஜா, செங்கோட்டையனுக்கு சால்வை அணிவித்து புத்தகம் வழங்கினார். இரவு 8.30 மணியளவில் அரிமா அரங்கிற்கு வந்த செங்கோட்டையனுக்கு தொண்டர்கள் பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். ஒரு கட்டத்தில் பட்டாசு பெட்டியை தூக்கிக்கொண்டு ஓடியதால், பட்டாசுகள் வானில் வெடித்து சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் உடுமலை ஸ்ரீ தாராபுரம் சாலையில் தற்காலிக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அரங்கத்திற்குள் நுழைந்த செங்கோட்டையனை பெண்கள் ஆரத்தி எடுத்து, மலர் தூவி வரவேற்றனர். கூட்ட நெரிசல் காரணமாக அவர் உள்ளே செல்வதில் சிரமம் ஏற்பட்டதால், சற்று நேரம் நாற்காலியில் அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டார். பின்னர் தொண்டர்கள் ஆட்டம், விசில், கோஷம் எழுப்பி அரங்கத்தை உற்சாகத்தில் மூழ்கடித்தனர். அதன் பின்னர் த.வெ.க உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. மேடையில் பேசிய செங்கோட்டையன், "தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் இன்று பெண்கள், இளைஞர்கள், படித்தவர்கள் என அனைத்து தரப்பினராலும் விரும்பப்படும் தலைவராக உருவெடுத்துள்ளார். மலேசியாவில் நடைபெற்ற 'ஜனநாயகன்' திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் விஜய்க்கு கிடைத்த வரவேற்பு உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்தது. 1972ல் எம்.ஜி.ஆர், 1988ல் ஜெயலலிதாவுக்கு இருந்த மக்கள் ஆதரவு அலையை, இன்று விஜயிடம் பார்க்கிறேன்" என்றார். 2026 சட்டமன்றத் தேர்தலில் விஜய் தான் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் என்றும், அவரை முதலமைச்சராக ஏற்றுக்கொள்ளும் கட்சிகளுடன் மட்டுமே த.வெ.க கூட்டணி அமைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். "50 ஆண்டுகள் ஒரே இயக்கத்தில் இருந்த நான், தற்போது விஜய்யின் தலைமையிலான த.வெ.க வெற்றிக்காக எனது அரசியல் அனுபவத்தை முழுமையாக பயன்படுத்துவேன்" என்றார். ஊழல் குறித்த கேள்விக்கு, "ஆளும் திமுக ஆட்சியும், முன்னாள் அதிமுக ஆட்சியும் ஊழல் விஷயத்தில் பெரிய வித்தியாசம் இல்லை. ஜனநாயகத்தில் மக்களுக்கு நேர்மையான ஆட்சி தேவை. த.வெ.க ஆட்சியில் நேர்மையான நல்லாட்சி வழங்கப்படும்" என்றார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் சாமிநாதன் கருத்துகளுக்கு பதிலளித்த செங்கோட்டையன், "யார் அரசியல் காமெடியன் என்பதை விரைவில் மக்கள் தீர்மானிப்பார்கள்" என தெரிவித்தார். வடமாநில தொழிலாளர்கள் தாக்கப்பட்டதாக எழுந்த கேள்விக்கு,"பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு, வேலை இல்லாத ஆண்களுக்கு இருசக்கர வாகனம் உள்ளிட்ட திட்டங்கள் த.வெ.க ஆட்சியில் செயல்படுத்தப்படும்" என்றார். இந்த மாத இறுதிக்குள் தேர்தல் கூட்டணி குறித்து அறிவிப்பு வெளியாகும் என்றும், தாராபுரம் தொகுதி த.வெ.க வெற்றி தொகுதியாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். பத்திரிகையாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்த செங்கோட்டையன், த.வெ.க ஆட்சி அமைந்தால் கல்விக் கடன், வேலைவாய்ப்பு, சமூகநீதி உள்ளிட்ட துறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161